**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 314/2020**

| Deposition of Name | விமலாதேவி | Prosecution | LW-3 as PW -3 |
|---|---|---|---|
| Father Name | தமிழரசன் | Defence | |
| Village | உடையார்பள்ளம் | Taluk | சீர்காழி |
| District | | Age | 25/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.07.2025 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

முதல் விசாரணை

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 01.06.2019ம் தேதி இரவு 9.00 மணி அளவில் நாங்கள் எங்கள் வீட்டில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தபோது, பிரகாஷ் மற்றும் பிரசாந்த் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து என் அண்ணன் பாரதியை அடித்தார்கள். நாங்கள் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது எங்கள் வீட்டு பொருட்களை எல்லாம் அடித்து சேதப்படுத்தி பிறகு எங்களையும் அடித்தார்கள். அந்த பிரகாஷ் மற்றும் பிரசாந்த் ஆகியோர் இன்று இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள். (சாட்சி ஆஜர் எதிரிகளை அடையாளம் காட்டினார்). சம்பவம் நடந்த அன்றைய தினம் காலை எதிரிகள் எங்கள் வயலில் உள்ள மரத்தை வெட்டினார்கள். அந்த மரம் அவர்களுடையதுதான். ஆனால் அது எங்கள் வயலில் இருந்தது. எனது தந்தை வழக்கமாக அந்த மரத்து நிழலில் அமர்ந்து சாப்பிடுவார். ஆகவேதான் அவர்கள் அந்த மரத்தை வெட்டி உள்ளார்கள். இதுகுறித்து என் தந்தை கேட்டதற்கு தான் அன்று இரவு அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து தாக்குதல் நடத்தினார்கள். அந்த சமயத்தில் நான் என் அண்ணனோடு அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தேன். முதலில் என் அண்ணனை எதிரிகள் அடித்தார்கள். இரும்பு பைப்பாலும் அருவாளாலும் அடித்தார்கள். எனக்கு யார் எந்த ஆயுதத்தை வைத்து அடித்தார்கள் என்பது சரியாக தெரியவில்லை. அவர்கள் எங்கள் வீட்டு பொருட்களை அடித்து உடைத்ததால்

அந்த பதட்டத்தில் யார் எதை வைத்து அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் என்னை பிரசாந்த் தான் தலையில் அருவாளை கொண்டு வெட்டினார். என்னுடைய அண்ணனை அரிவாள் கொண்டு அவருடைய முதுகில் வெட்டினார். மேலும் பிரசாந்த் எனது அண்ணனின் lowerஐ கழட்டிவிட்டு அவரை அடித்தார். அந்தத் தாக்குதலில் என் அண்ணனுக்கு நிறைய ரத்தப்போக்கு ஏற்பட்டு, பிறகு எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் வசிக்கும் மதி என்பவர் ஓடி வந்து சண்டையை விலக்கிவிட்டு என் அண்ணனை அவருடைய இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

2. அதேபோல என் தாயாரையும் அந்த சம்பவத்தில் எதிரி பிரகாஷ் கலையில் வெட்டிவிட்டார். அதில் அவருக்கும் காயம் ஏற்பட்டு எங்கள் இருவருக்கும் ரத்தம் வந்தது. எதிரி பிரகாஷ் அவருடைய வீட்டுக்கு சென்று மீண்டும் ஒரு அருவாளை எடுத்துக்கொண்டு எங்களை வெட்ட வந்தார். நான் மதியழகன் வீட்டில் ஓடி ஒளிந்து கொண்டேன். என்னுடைய தாயார் பருத்திக் கொள்ளையில் ஓடி ஒளிந்து கொண்டார். அந்த சமயத்தில் எதிரிகள் இருவரும் குடிபோதையில் இருந்தார்கள். மதியழகனின் மனைவி என்னை அவர்கள் வீட்டில் வைத்து பூட்டவில்லை என்றால் அன்று என்னை எதிரிகள் ஏதாவது செய்திருப்பார்கள்.

3. இந்த தாக்குதல் முடிந்த பிறகு என் தாயார் எங்கள் வீட்டு பக்கத்தில் வசிக்கும் ரவி என்பவர் வீட்டுக்கு சென்று இதுபற்றி கூறினார்கள். உடனே ரவி அவருடைய இருசக்கர வாகனத்தை எடுத்து வந்து எங்கள் இருவரையும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு எங்களுக்கு முதல் உதவி சிகிச்சை கொடுக்கப்பட்டு மயிலாடுதுறை மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். மயிலாடுதுறையில் சுமார் 15 நாட்கள் தங்கி இருந்தோம். சம்பவம் நடந்தபோது என் தந்தை வீட்டில் இல்லை. வேறொரு சுப நிகழ்ச்சிக்காக சென்றிருந்தார். மயிலாடுதுறை மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் மற்றும் என்னுடைய அண்ணன் ஆகிய இருவரும் பட்டப்படிப்பு படித்தவர்கள் என்றால் சரிதான். நான் தற்போது சொன்ன அதே சங்கதிகளை தான் போலீசார் என்னை விசாரித்த போதும் சொன்னேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த சமயத்தில் நான் வீட்டில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். என் வீட்டு கதவிற்கும் வாசலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 அடி தூரம் இருக்கும். எதிரிகள் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி தூரம் இருக்கும். சத்தம் கேட்டு தான் நான் வெளியே வந்து பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் வீட்டுக்குள் வைத்து தான்

நடந்தது.

2. எதிரிகள் இருவரில் யார் முதலில் வந்தார்கள் என்றால் பிரகாஷ் தான் வந்தார். எதிரிகள் எங்களை தாக்கும் போது யார் தடுத்தார்கள் என்றால் என் அண்ணன் தடுத்தார். வேறு வெளி நபர்கள் யாரும் தடுக்கவில்லையா என்றால் என் தாயார் ஓடி வந்து பிரகாஷை தடுத்தார். இவ்வாறு சண்டை நடந்து கொண்டிருந்தபோது பிரசாந்த் உள்ளே வந்து எங்கள் வீட்டு பொருட்களையெல்லாம் அடித்து உடைத்து விட்டார். சண்டை அன்றைக்கு எவ்வளவு நேரம் நடந்தது என்றால் ஒரு மணி நேரத்திற்கு மேல் நடந்தது. நான் மதி வீட்டில் சென்று ஒழிந்து கொண்ட போது மதி வீட்டில் தான் இருந்தாரா என்றால் இல்லை. அவர் காயப்பட்ட என் அண்ணனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மதி எங்கள் வீட்டுக்கு உள்ளே வந்தாரா என்றால் வரவில்லை. வாசலில் நின்று கொண்டு என் அண்ணனை வெளியே வருமாறு கூப்பிட்டார். நான் எவ்வாறு சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ரவி என்பவரோடு அவரது இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து கொண்டு சுமார் 10:30 மணி அளவில் சென்றேன். சீர்காழி அரசு மருத்துவமனையில் இருந்து 108 ஆம்புலன்ஸில் மயிலாடுதுறைக்கு சென்றேன்.

3. சம்பவம் நடந்த உடனே காவல் நிலையத்துக்கு புகார் கொடுக்கப்பட்டதா என்றால் மதியழகன் கொடுத்திருப்பார் என்று நினைக்கிறேன். இந்த வழக்கின் புகாரை யார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் நான் அதை பார்க்கவில்லை. எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் அடிக்கடி தகராறு நடக்கும் என்றால் சரிதான். உண்மையில் எனது அண்ணன் தான் என்னோடும் என் தாயாரிடம் சண்டை போட்டு எங்கள் வீட்டு பொருட்களை அடித்து சேதப்படுத்தினார் என்றாலும் அதனால் ஏற்பட்ட காயங்களை வைத்துக்கொண்டு நாங்கள் எதிரிகளை தொடர்புபடுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளித்தது போல எதுவும் உண்மையில் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC. 314/2020**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கோகிலாம்பாள் | Prosecution | LW-2 as PW -2 |
| Father Name | க/பெ. தமிழரசன் | Defence | |
| Village | உடையார்பள்ளம் | Taluk | சீர்காழி |
| Calling | | Age | 47/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.07.2025 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த பாரதிதாசன் என்னுடைய மகன் ஆவார். கடந்த 2019 ஆம் வருடத்தில் ஒருநாள் நான் எனது வீட்டு பின்புறமுள்ள கொல்லையில் இரவு 9.00 மணி அளவில் சமைத்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் பிரகாஷ் மற்றும் பிரசாந்த் ஆகியோர் என் மகனோடு சண்டை போட்டார்கள். எதிரிகளுடைய மரம் எங்கள் வயளில் இருந்தது. நாங்கள் அந்த மரத்தடி நிழலில் தான் உட்காருவோம். அந்த மரத்தை எதிரிகள் வெட்டிவிட்டார்கள். என் கணவர் அது பற்றி அவர்களிடம் எதற்காக அதனை வெட்டினீர்கள் என கேட்டதற்கு அவர்கள் இருவரும் கோபம் கொண்டு என் மகனை அடிக்க வந்துவிட்டனர். என்னுடைய மகனை பிரசாந்த்தும் பிரகாசும் இளநீர் வெட்டும் அருவாளை கொண்டு அவருடைய சுண்டு விரலை வெட்டி விட்டனர். நானும் என்னுடைய மகள் விமலாவும் அவர்களை தடுத்தபோது, என்னை பைப்பாலும் என் மகளை அருவாளாலும் தாக்கினார்கள். அதுபோக, எங்கள் வீட்டில் இருந்த சாமான்களை எல்லாம் அடித்து உடைத்து விட்டார்கள். பருத்தி கொல்லையில் ஓடி பதுங்கிக் கொண்ட என்னை எதிரிகள் துரத்திக் கொண்டு வந்து வெட்டினார்கள். அவர்கள் என்னை வெட்டிய அருவாள் அங்கு தான் கிடந்தது. மேற்படி தாக்குதலை தொடர்ந்து எங்கள் வீட்டுக்கு பக்கத்து வீட்டை சேர்ந்த ரவி மற்றும் மதியழகன் ஆகியோர் எங்களை மாயவரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

போலீசார் அங்கு வைத்து என்னை விசாரித்தார்கள். நடந்தது இதுதான்.

**குறுக்கு விசாரணை :**

1. சம்பவம் நடந்த இடத்திற்கும் எதிரிகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் எதிரெதிர் வீடுதான். நாங்கள் எதிரெதிர் வீட்டில் வசிப்பதால் அடிக்கடி எங்களுக்குள் தகராறு நடக்கும் என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது எங்கு இருந்தேன் என்றால் என்னுடைய வீட்டுக்கு பின்புறம் அமைந்துள்ள கொள்ளை புறத்தில் சமைத்துக் கொண்டிருந்தேன். நான் சத்தம் கேட்டு தான் வெளியே வந்தேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு வெளியே வந்த போது என் மகள் மற்றும் மகன் ஆகியோர் என்ன செய்து கொண்டிருந்தனர் என்றால் என்னுடைய மகள் என்னோடு பின்புறத்தில் சாமான்கள் விளக்கிக் கொண்டிருந்தார். என்னுடைய மகன் எங்கள் வீட்டு ஹாலில் அமர்ந்திருந்தார். நான் 100 நாள் வேலைக்கு செல்லும் வழக்கம் உண்டா என்றால் உண்டு. எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் சுமார் எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்றால் ½ மணி நேரம் நடந்திருக்கும்.

2. எங்கள் தெருவில் மொத்தம் எத்தனை குடும்பம் வசிக்கிறது என்றால் நான்கு குடும்பம் வசிக்கிறது. அந்த குடும்பத்தினர்கள் எங்களுக்கு உறவா என்றால் எங்களுக்கு உறவு தான், எதிரிகளுக்கும் உறவுதான். இவ் வழக்கில் சாட்சி சொல்ல எங்கள் தெருவில் வசிக்கும் நபர்கள் யாரேனும் வந்துள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பிறகு என்னை எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் முதலில் சீர்காழி அரசு மருத்துவமனைக்கும் அதன் பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றார்கள். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் 108 அரசு ஆம்புலன்சில் சென்றேன். அந்த ஆம்புலன்ஸில் நான் மட்டும்தான் சென்றேனா என்றால் இல்லை காயம்பட்ட என்னுடைய மகன் மற்றும் மகள் ஆகியோரும் என்னோடு வந்தார்கள். மேலும் மதிவாணன் என்பவரும் எங்களோடு வந்தார்.

3. இவ் வழக்கு சம்பந்தப்பட்ட புகாரை யார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அடித்ததாக சொல்லும் ஆயுதங்கள் எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் அருவாளாகும் இளநீர் வெட்டும் அருவாளாகும். அது சுமார் ஒரு அடி நீளம் இருக்குமா என்றால் இருக்கும். அவர்கள் என்னை வைத்து அடித்த பைப்பு எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமார் 4 அடி இருக்கும். சம்பவம் நடந்தபோது தெரு விளக்கு இருந்ததா என்றால் ஒரே ஒரு குண்டு பல்பு இருந்தது. நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் நான் 100 நாள் வேலை செய்த போது கீழே விழுந்து காயம் பட்டு விட்டு, எதிரிகள் மீது உள்ள விரோதம் காரணமாக அவர்கள் தான் அடித்தார்கள் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கும் எனக்கும் ஏற்பட்ட தகராறு

காரணமாக தான் என் மகன் எனது வீட்டு பொருட்களை உடைத்தார் என்றாலும் அது தவிர என் மகன் தான் என்னை அடித்து காயப்படுத்தினார் என்றாலும் சரியல்ல. குடும்ப சண்டையின் போது எனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளோடு இருந்த பகையை தீர்த்துக் கொள்வதற்காக பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. அதனால்தான் இவ் வழக்கில் எனது தெருவை சேர்ந்த நபர்கள் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் தவறு. எங்கள் வீடு தெருவில் தனியாக அமைந்துள்ளது. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் அவர்கள் நிரபராதிகள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**